இலங்கையின் மலையகத் தமிழ்ச் சமூகங்களால் முகங்கொடுக்கப்பட்ட
பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டு

# சாத்தியமான கொள்கைச் சீர்திருத்தங்கள் தொடர்பில் அவை முழுவதையும் உள்ளடக்கியிராத ஒரு குறிப்பின் விளக்கம்

*ஒரு பரந்த கொள்கைக் கலந்துரையாடலுக்கான ஆரம்ப ஏற்பாட்டமைப்பு*

CENTRE FOR POLICY ALTERNATIVES

**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தயார் செய்யப்பட்டது**

ஜூலை 2023

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீனமான, அரசியல் கட்சி பேதமற்ற ஓர் அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் என்பவற்றுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்துகின்றது. பொதுக் கொள்கை தொடர்பான வாதப் பிரதிவாதங்களைப் வலுப்படுத்துவதில் சிவில் சமூகத்தின் பங்களிப்புத் தேவை அவசியமானது என்ற என்ற உறுதியான நம்பிக்கையில் 1996 இல் அமைக்கப்பட்ட, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அரச கொள்கைகள் திறனாய்வு செய்யப்பட்டு, மாற்று வழிகள் இனங்காணப்பட்டு மற்றும் அவை பரப்புரை செய்யப்படுகின்ற ஆராய்ச்சி மற்றும் ஆதரித்து வாதாடல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பற்றுறுதி கொண்டுள்ளது.

இல. 6/5, லேயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386
தொலைநகல்: +9411 2081388
மின்னஞ்சல்: info@cpalanka.org
இணையத்தளம்: www.cpalanka.org
மின்னஞ்சல்: info@cpalanka.org
முகநூல்: www.facebook.com/cpasl
கீச்சகம் (டுவிட்டர்): @cpasl

# பொருளடக்கம்

**அறிமுகம்** .......... 4
**உரிமைகள் மற்றும் நல்வாழ்வின் பாதுகாப்பு** .......... 5
முக்கியமான பிரச்சினைகள் .......... 5
கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி .......... 7
ஒரு விரிவான கொள்கை உரையாடலுக்கு முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் .......... 9
**வீட்டுவசதி நெருக்கடி** .......... 11
முக்கியமான பிரச்சினைகள் .......... 11
கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி .......... 12
ஒரு விரிவான கொள்கை உரையாடலுக்கு முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் .......... 13
**சிறுவர் மற்றும் இளைஞர்** .......... 15
முக்கியமான பிரச்சினைகள் .......... 15
கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி .......... 17
ஒரு விரிவான கொள்கை உரையாடலுக்கு முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் .......... 17
தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் முறைசாராத் தொழிலாளர்கள் .......... 20
முக்கியமான பிரச்சினைகள் .......... 20
கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி .......... 21
முன்மொழியப்பட்ட செயற்பாடுகள் .......... 21

# அறிமுகம்

இந்த ஆவண விளக்கம், மலையகத் தமிழர்கள் சமூகத்தின் (மலைநாட்டுத் தமிழர்கள்) உரிமைகள் தொடர்பான இடையீடுகள் சம்பந்தப்பட்ட சாத்தியமான கொள்கை மற்றும் நடைமுறை என்பவற்றுக்கான முக்கியமான பிரச்சினைகள், சவால்கள் மற்றும் விரிவான ஆலோசனைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காகத் தயார் செய்யப்பட்டது. இந்த விடயம், குறிப்பான கொள்கைச் சீர்திருத்தங்கள் மற்றும் இடையீடுகளை இனங் காண்பதற்கு விரிவான மற்றும் அர்த்தமுள்ள சமூகக் கலந்தாலோசனைகளை அவசியமாகத் தேவைப்படுத்துகின்ற ஒரு பரந்த மற்றும் சிக்கலான பிரச்சினையாகும். எனினும், அந்தத் திசையில் ஒரு கொள்கைக் கலந்துரையாடலை முன்னெடுப்பதற்கு புதிய சீர்திருத்தங்கள் அல்லது இருக்கின்ற சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பயனுறுதியான அமுல்படுத்தலுக்குத் தேவைப்படுகின்ற பரந்த மற்றும் சாத்தியமான பகுதிகளைப் புரிந்து கொள்ளவும் மற்றும் ஆவணப்படுத்துவதற்கும் அது எதிர்பார்க்கிறது. அதனால், இந்த ஆவணம் இந்த நாட்டில் சம உரிமைகளை அளிக்கும் நோக்கில் மலையகத் தமிழர்களால் (மலைநாட்டுத் தமிழர்கள்) முகங் கொடுக்கப்படும் பிரச்சினைகளைத் தெளிவான வகையில் கூறுகின்ற, ஆனால் அவை முழுவதையும் உள்ளடக்கியிராத ஒரு பகுப்பாய்வாகும்.

இலங்கையின் மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் அதிகளவில் வாழுகின்ற, தமிழ் பேசுகின்ற தனித்துவமான சமூகமான மலைநாட்டுத் தமிழர்கள், தற்போது தங்களை மலையகத் தமிழர்களாக (மலைநாட்டுத் தமிழர்கள்/இந்தியத் தமிழர்கள்/தோட்டப்புறத் தமிழர்கள்/மலைத் தோட்டத் தமிழர்கள்) இனங் காட்டிக் கொள்பவர்கள், பிரித்தானியக் காலனித்துவக் காலத்தின் போது இலங்கைக்கு வந்த கொத்தடிமைத் தொழிலாளர்களின் வழித்தோன்றல்களாவர். இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் விரைவில், குடியுரிமைச் சட்டத்தின் அறிமுகம் அவர்களின் குடியுரிமையை மறுத்ததுடன் பிரதான அபிவிருத்திச் செய்முறைகளின் அனைத்து வடிவங்களிலிருந்தும் அவர்களைப் புறந்தள்ளியது. நாடற்றநிலைப் பிரச்சினை 2003 இல் தீர்க்கப்பட்டபோதிலும், அமைப்பு ரீதியிலான புறந்தள்ளல் அபிவிருத்தி, ஆளுகை, மற்றும் அரசியலில் தொடர்ந்து இருந்ததுடன், நாட்டின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது குறைவான சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. பெருந்தோட்டப் பகுதிகளில் வாழுகின்ற சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் மலையகத் தமிழர்களாவர்.

மத்திய, ஊவா, சப்பிரகமுவ, மேல், வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் மாவட்டங்களில் பிரதேச செயலாளரின் பிரிவுகளின் கீழ் வரும் பகுதிகளாக 'பெருந்தோட்டப் பிராந்தியங்கள்'' வரையறுக்கப்பட்டுள்ளதுடன் அங்கு தோட்டங்களில் தொழிலாளர்கள் வதிகின்றதுடன் அங்கே தேயிலை, இறப்பர், தென்னை, அல்லது எண்ணெய்ப் பனை என்பன பயிர்செய்யப்படுகின்றன. இலங்கையின் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2011 அறிக்கையின் படி, இலங்கையின் மொத்த மக்கள் தொகையின் 901,647 பேர்கள் அல்லது 4.4 சதவீதத்தினர் தோட்டத் துறையில் வாழ்கின்றனர்.

இலங்கையில் முழுமையான மற்றும் சமனான குடியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு மலையகத் தமிழ்ச் சமூகம், பல வருடங்களாகப் போராடி வருகிறது. நாட்டின் பொருளாதார சுபிட்சத்திற்கு அவர்களின் கணிசமாகப் பங்களித்திருந்த போதிலும், அரசியல், ஆளுகை மற்றும் பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றில் சமனான மற்றும் முழுமையான குடியுரிமை கொண்டவர்களாகத் தாங்கள் நடத்தப்படவில்லை என்பதை இச்சமூகம் நீண்ட காலமாக உணர்ந்து வந்துள்ளது.

1823 இல் பெருந்தோட்டத்துறை ஆரம்பித்ததிலிருந்து கடந்த 200 வருடங்களாக இலங்கையின் நன்னிலைக்கு அளப்பரிய பங்களித்த மலையகத் தமிழர்கள் குறிப்பான கொள்கைப் பாதுகாப்பு இல்லாமை அல்லது மந்தமான கொள்கை அமுல்படுத்துதல் காரணமாக நசுக்கப்பட்ட ஒரு சமூகமாகக் கருதப்பட முடியுமென்பதுடன் அதனால் உரிமைகள் அடிப்படையிலான பிரச்சினைகளுக்கு குறுகிய, இடைக்கால மற்றும் நீண்ட கால சட்டவாக்க, கொள்கை ரீதியான மற்றும் நடைமுறை தொடர்பான உறுதியான நடவடிக்கைகளுடன் தங்களது உரிமைகள் அடிப்படையிலான பிரச்சினைகளுக்காக அவர்கள் வாதாடி வருகின்றனர்.

## உரிமைகள் மற்றும் நல்வாழ்வின் பாதுகாப்பு

***குறிக்கோள்:*** *வேலைத்தலச் சுரண்டல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்பவற்றின் மீதான கவனம் செலுத்தலுடன் தோட்டப்புறச் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வு என்பவற்றைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கு கொள்கைகளை உருவாக்குதல்.*

### முக்கியமான பிரச்சினைகள்

- ⇨ பெருந்தோட்டத்துறையிலுள்ள மலையகத் தமிழ்ச் சமூகத்தின் தனித்துவமான அடையாளத்தின் அங்கீகரித்தல், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றதும் அவர்களின் நல்வாழ்வினை முன்னேற்றுகின்றதுமான ஒரு பரந்த மற்றும் பாதுகாப்புக் கட்டமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கான ஓர் அடிப்படை முன்னிபந்தனையாகும்.

- ⇨ இந்த நாட்டின் பிரஜைகளாக, சட்டரீதியான அர்த்தப்படுத்தலின் தொழில்நுட்ப வரைவிலக்கணத்திற்குள், மலையகத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், நடைமுறை ரீதியில், குறித்த சட்ட அந்தஸ்து மலையகத் தமிழ்ச் சமூக உறுப்பினர்கள் பெரும்பாலானவர்களுக்காக 'திறனான மற்றும் சமனான குடியுரிமை' என்பதை அர்த்தப் படுத்தும் வகையில் அது பொருள் கொள்ளப்படவில்லை. இந்தச் சமூகங்கள் வெறுமனே தேர்வு செய்பவர்களாகவும் பதிவு செய்யப்பட்டு மற்றும் தேர்தல்களில் வாக்காளர்களாக மட்டுமே கருதப்படுகின்ற போதிலும், அவர்கள் தொடர்ச்சியாக புறந்தள்ளப்பட்டு மற்றும் பொதுச் சேவைகளின் அணுகுதல் மற்றும் ஏனைய சமூகங்களுடன் சம அடிப்படையில், பல்வகையான சமூக-பொருளாதார மற்றும் ஏனைய உரிமைகளின் அனுபவித்தலில் பாரபட்சப்படுத்தப்படுகிறார்கள்.

- ⇨ வேரூன்றிப்போன சமூக நெறிமுறைகள் மாத்திரம் இந்தப் புறந்தள்ளலை ஏற்படுத்தவில்லை என்பது மட்டுமன்றி, அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் பொறுப்பற்ற ஆட்சி முறைகளும் கூட இந்த நாட்டின் பிரஜைகளாக அவர்களை அங்கீகரிப்பதற்கு உண்மையான ஓர் அரசியல் துணிவை வெளிக்காட்டவில்லை.

- ⇨ நல்வாழ்வு ஏற்பாடுகளை அளிப்பதற்கு ஒப்பந்தக் கடப்பாடுகள் தோட்ட முகாமைத்துவங்களை நிர்ப்பந்திக்கின்ற போதிலும் கூட, அவற்றின் வழங்கல்களை அவ்வாறு அளிப்பதை அவை நிறுத்தியுள்ளன. சுகாதாரம், வீட்டுவசதி, சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் ஏனைய வசதிகளிற்கு குறைந்தபட்ச தரங்களிலான அணுகுவழிகள் அங்கு இல்லாதுள்ளன. அரசு, தொழிற் சங்கங்கள், சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையில் திறந்த வகையில் கலந்துரையாடல்களின்மை மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பாரபட்சமான வாழ்க்கை நிலைமைகளை மோசமாக்கியுள்ளன. அடக்குமுறையை எதிர்த்து சவாலுக்குட்படுத்துவதற்கு தொழிலாளரின் சமூகத் தொடர்புகள், பண பலம், கல்வி மற்றும் சுயமரியாதை என்பவற்றிலான குறைபாடுகள் பெருந்தோட்ட முகாமைத்துவங்கள் உட்பட, இந்தப் பிரச்சினைகளை எந்தக் கவனமுமின்றி தொடர்ந்து உதாசீனப்படுத்துவதற்கு வைத்துள்ளன.

- ⇨ ஓரங்கட்டப்படுதல், பாரபட்சப்படுத்தப்படல், சுரண்டல் வேலை நிலைமைகள் மற்றும் மோசமான வாழ்க்கை நிலைமைகளால் மலையகத் தமிழர்கள் அளவுக்கதிகமாகப் பாதிக்கப்பட்டனர். பின்வரும் அட்டவணை 2016-19 காலப்பகுதிகளின் போது ஏனைய சமூகங்களுடனான ஒரு ஒப்பீட்டில் இந்தச் சமூகத்தின் நிலைமையைச் சுட்டிக்காட்டுகிறது. எனினும், சமீபத்தைய துல்லியமான புள்ளி விபரங்கள் கொவிட்-19 பெருந்தொற்றின் பின்னான ஒரு பின்னணியில் அதன் பின்விளைவான பொருளாதார நெருக்கடியால் மோசமாகப் பாதிக்கப்பட்டதொன்றான மலையகத் தமிழ்ச் சமூகத்தின் நிலைமையைச் சுட்டிக்காட்டலாம். இது, இந்தச் சமூகத்தின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ள சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பின் இடையூறுகளின் நேர்மையான மதிப்பீட்டிற்கான தேவையைச் சுட்டிக்காட்டுகிறது. அதனால், இலங்கையில் இந்தச் சமூகங்களின் நீண்ட காலப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்வதற்கு பிரத்தியேகமான கொள்கை நடவடிக்கைகள், பொறுப்புக்கூறக் கூடிய நடைமுறைப்படுத்தல் பொறிமுறைகள், பொறுப்பான நிர்வாகக் கட்டமைப்புகள், பொருத்தமான உறுதியான செயற்பாடுகள் என்பவை பாதிக்கப்பட்ட

சமூகங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் கலந்தாலோசித்து கவனமாக உருவாக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை 1: தோட்டத் துறையில் சமூகப்பொருளாதார நிலைமையின் ஒப்பீடு – 2016-2019**

| குறிக்காட்டிகள் | தேசிய மட்ட அளவு | நகர மட்ட அளவு | கிராமிய மட்ட அளவு | தோட்டப்புற மட்ட அளவு |
|---|---|---|---|---|
| பிரதான மூலம் வழியான சராசரி மாத வருமானம் (சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள்) (இலங்கை ரூபாய்கள்) | - | 43226 | 25443 | 39195 |
| மாதமொன்றுக்கான சராசரிக் குடும்ப வருமானம் (ரூபாய்கள்) (2019) | 76414 | 116670 | 69517 | 46865 |
| மாதமொன்றுக்கான சராசரித் தலா வருமானம் (ரூபாய்கள்) | 20527 | 30452 | 18870 | 11647 |
| வருமானம் ஈட்டுபவரின் மாதமொன்றுக்கான சராசரி வருமானம் (ரூபாய்கள்) | 42308 | 61426 | 39324 | 22469 |
| குடித்தனத்தில் வருமானமீட்டுபவர்களின் எண்ணிக்கை (%) | 1.8 | 1.9 | 1.8 | 2.0 |
| குடித்தனத்தின் அளவு (%) | 3.8 | 4 | 3.8 | 4.1 |
| மாதமொன்றுக்கு குடித்தனத்தின் சராசரிச் செலவு (ரூபாய்கள்) | 63130 | 95392 | 57652 | 38519 |
| தலைக்குரிய வறுமை வீதம் (%) (2019) | 11.9 | 4.4 | 12.6 | 29.7 |
| துறை ரீதியான வறுமை வீதம் (%) (2019) | 14.3 | 6.0 | 15.0 | 33.8 |
| வேலைவாய்ப்பின்மை (%) | 4.4 | 4.0 | 4.5 | 3.1 |
| கடனிலுள்ள குடித்தனங்கள் % | 59.7 | 52.9 | 60.9 | 64.4 |
| பல்கலைக்கழகக் கல்வி (%) | 6 | - | - | 0.3 |
| வீடொன்றைச் சொந்தமாகக் கொண்டுள்ள மக்கட் தொகை (%) | 83.7 | - | 90.4 | 5.6 |
| தனி வீட்டுவசதி | 5.3 | 93.9 | 98.5 | 40.8 |
| சிவில் சேவையிலான பிரதிநிதித்துவம் (%) | 22% | - | - | 1.1 |
| எழுத்தறிவு (%) | 93.1 | 95 | 93 | 85 |
| கணினியறிவு (%) | 21.6 | 35 | 19.9 | 6 |
| சுத்தமான தண்ணீருக்கு வழிமுறை கொண்ட மக்கட்தொகையின் அளவு (%) | 82.8 | - | 84.3 | 55.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| கழிவறை வசதிகளை உபயோகிக்காத குடித்தனங்களின் அளவு (%) | 1.7 | 0.2 | 1.8 | 4.6 |
| சிசு இறப்பு வீதம் (1000 மகப்பேறுகளுக்கானது) (%) | 9.7 | - | - | 29 |
| பிறப்பில் நிறை குறைவான பிள்ளைகள் (%) | 16.6 | - | - | 31 |
| மிதமான உணவுப் பாதுகாப்பின்மை | - | 31.9 | 34.9 | 41.3 |
| தீவிரமான உணவுப் பாதுகாப்பின்மை | - | 2.1 | 1.1 | 2.1 |
| 05 வயதுகளிற்கு குறைவானவர்களில் வளர்ச்சி குன்றியவர்களின் வீதம் | 18 | - | - | 40.8 |

⇨ இரண்டு நூற்றாண்டுகளாக பெருந்தோட்டத் துறையில் சுகாதார சேவைகளின் வழங்குதல்களில் பௌதிக மற்றும் உத்தியோகபூர்வ வகைகளிலான புறந்தள்ளல்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. தற்போது சுகாதார முறைமை தேசிய மற்றும் மாகாண சுகாதார அதிகாரிகளைப் புறக்கணித்து பெருந்தோட்ட நிறுவனங்களால் முகாமைத்துவம் செய்யப் படுகின்றமை பொறுப்புக்கூறலின்மை காரணமாக முற்றிலுமான ஒரு கவனமின்மைக்கு வழி வகுக்கிறது.

⇨ இதனொரு விளைவாக, சிசு மரணம், பேறுகால மரணம், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் ஏனைய சுகாதாரக் குறிக்காட்டிகள் மோசமான மட்டங்களில் உள்ளன. சிசு மரண வீதம் ஒரு சமுதாயத்தில் அல்லது ஒரு நாட்டில் நிலவும் சுகாதார நிலைமைகளின் ஒரு பிரதான குறிக்காட்டியாகும். அதனால், இலங்கையின் தேசிய சுகாதாரக் குறிக்காட்டிகள் பிராந்திய மட்டத்தில் நியாயமாக ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருக்கும் அதேவேளை, சிசு மரண வீதங்கள் பெருந்தோட்டத் துறையில் உயர்ந்தளவிலாக உள்ளன.

## கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி

- 1823 இலிருந்து இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக, இலங்கையின் பொருளாதாரம், அபிவிருத்தி, மற்றும் சென்மதி நிலுவைகள் என்பவற்றுக்கு பாரிய பங்களித்துள்ள பெருந்தோட்டப் பகுதிகளில் வாழுகின்ற மலையகத் தமிழ் சமூகம், உரிய வகையில் **அங்கீகரிக்கப்படவில்லை.**

- சுதந்திரத்தின் பின் கணிசமான ஒரு காலப்பகுதிக்கு இச்சமூகம் அதன் குடியுரிமைகள், அபிவிருத்தி வாய்ப்புகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் என்பவை மறுக்கப்பட்ட நிலைமையில் **அரசியல் ரீதியான அங்கீகாரமற்றிருந்தது**. அதனொரு விளைவாக இலங்கையில் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது அநேகமான சமூகப்-பொருளாதார மற்றும் மனித அபிவிருத்திக் குறிக்காட்டிகளில் அது பின்னிற்கிறது.

- ஒரு தனித்துவமான அடையாளத்துடனும் மற்றும் இலங்கையர் என்ற பிரதான அடையாளத்திற்கு பங்களிக்கின்ற முழுவளவிலான உரிமைகள் மற்றும் வாக்காளர் சமூகம் என்ற கௌரவத்தை அனுபவிக்கும் சமத்துவம் கொண்ட குடிமக்களாக நடத்தப்படுவதற்கு அவர்களது உரிமையை அங்கீகரிக்கும் **கொள்கைகளிலான அமுலாக்கமின்மை.**

- 2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிரதேச சபைகள் (திருத்தம்) சட்டத்தின் **பயனுறுதியான அமுல்படுத்தலின்மை.** 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம். பிரதான திருத்தத்தின் பிரிவு 33 இன் திருத்தம்.

பிரிவு 3 (2), *''பெருந்தோட்டப் பிரதேசங்களைப் பொறுத்தவரை, பிரதேச சபைகள், சம்பந்தப்பட்ட தோட்டத்தின் நிர்வாக அதிகாரத்துடனான கலந்தாலோசனையுடனும் ஒரு விசேட தீர்மானத்தின் ஏற்றுக்கொள்ளலின் பேரில், சம்பந்தப்பட்ட பெருந்தோட்டப் பிரதேசங்களில் வதிவோர்களிற்கு வீதிகள், கிணறுகள் மற்றும் அவ்வதிவோர்களின் நலன்களுக்கு அவசியமான ஏனைய பொது வசதிகள் என்பவற்றுடன் அவர்களுக்கு வசதியளிப்பதற்கு பிரதேச சபை நிதிகளை உபயோகிக்கும்,''* என ஏற்பாடளிக்கிறது.

- தனியார் நிறுவனங்களால் கைவிடப்பட்ட, தங்களது நல்வாழ்வுக்காக தனியார் நிறுவனங்கள் வழங்குபவை மீது தங்கியிருந்த இந்தத் தோட்டச் சமூகங்களின் தேவைகள் மற்றும் குறைகளைக் கவனம் செலுத்துவதற்கு ஒரு தேசிய விவசாய அபிவிருத்தி அதிகாரசபை, மகாவலி அதிகாரசபையைப் போன்று, தோட்டத் துறைச் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான ஓர் அரசாங்க அதிகாரசபையாக ஸ்தாபிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 32 அம் இலக்க பெருந்தோட்டப் பிராந்தியதுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் **பயனுறுதியான அமுல்படுத்தலின்மை.** இந்த அமுல்படுத்தலின்மை குறித்த சட்டத்தின் குறிக்கோள்களை பயனுறுதியான வகையில் அர்த்தமற்றதாக்கியது.

- நீண்டகால அடக்குமுறையின் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கும் மலையகத் தமிழ் சமூகங்களின் நீண்டகால சமூக அமைப்பிற்கு இவ்வாறான சட்டக் கட்டமைப்புகளின் அமுல்படுத்துதல் மீதான **கண்காணித்தல் மற்றும் மீளாய்வு இல்லாமை** எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. உதாரணத்துக்கு, 2018 ஆம் ஆண்டின் 32 அம் இலக்க பெருந்தோட்டப் பிராந்தியதுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் அமுல்படுத்தலுடன் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பயனுறுவதற்கான ஓர் அர்த்தமுள்ள குறிக்கோள் பலவீனமானதாகும். அதிகாரசபையின் குறிக்கோள்கள் இவ்வாறாக இருத்தல் வேண்டும் - *(அ) பெருந்தோட்டப் பிராந்தியத்தில் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மூலம் சமூகத்தின் பிரதான விடயங்களிற்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தோட்டப்புறச் சமூகத்தின் உள்ளீர்த்தலை உறுதிப்படுத்தல்; மற்றும் (ஆ) தேசிய அபிவிருத்திச் செய்முறைகளுக்கு அவர்கள் பங்களிப்பதற்கு வசதியளிக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்ட விடயப் பரப்புகளில் தோட்டப்புறச் சமூகத்தை, சமூக ரீதியாகவும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் வலுப்படுத்துதல்...*

- சுகாதார சேவைகள் பொருத்தமானவிடங்களில் தேசிய சேவையுடன் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு மற்றும் முக்கியமாக மாகாண சுகாதார முறைமைகள் உரிய பொறுப்புக்கூறலுடன் விடயத்தை முகாமைத்துவம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண சபைகளை இயலச் செய்வதற்கு **கொள்கை அமுல்படுத்தலின்மை.** 250,000 குடும்பங்களைக் கொண்டதாக நாட்டில் தற்போது, 412 தோட்டங்கள் உள்ளன. தற்போதையளவில், 61 தோட்ட வைத்தியசாலைகள் மட்டுமே மாகாண சுகாதார நிர்வாகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஏனையவை இன்னமும் தோட்ட முகாமைத்துவத்தின் கீழேயே இருக்கின்றன.

- மலையகத் தமிழ் சமூகங்கள் அணுகி மற்றும் பயன்பெறுவதற்கு முடிகின்ற ஒரு வலுவான மாகாண மட்ட சுகாதார சேவைகள் முறையை ஸ்தாபிப்பதற்கு இதுவரை ஏதேனும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு **அரசியல் துணிவில்லாதிருத்தல்.** பெருந்தோட்டப் பிராந்தியங்களாக ஒதுக்கப்பட்ட பிராந்தியங்களில் மாகாண அரசாங்கப் பொறிமுறையை சமனாக அமுல்படுத்துவதற்கு அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் தரப்பிலான அலட்சியப் போக்கின் ஒரு சுட்டிக்காட்டுதலே இதுவாகும்.

- பெருந்தோட்டத் துறையில் பிரதான நிர்வாகக் கட்டமைப்புகளில் பொதுச்சேவைகளை **ஒருங்கிணைக்கும் செயன்முறை இல்லாமை**. இது, சமனான கல்விக்கான வாய்ப்புகள், போதுமான போக்குவரத்துச் சேவைகள், வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல், நீர் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல், மற்றும் அவர்கள் விரும்பும் மொழியில் அவர்களுக்கான சேவைகளைப் பெறுவதற்கு வசதியளித்தல் என்பவற்றுடன் சமூகத்தை வலுப்படுத்துதல் போன்ற கவனமான அர்ப்பணிப்பைத் தேவைப்படுத்துகிறது.
- பெருந்தோட்டத் துறையில் வதியும் அனைத்து தனிப்பட்ட குடும்பங்களுக்கும் 'அஞ்சல் முகவரிகளின்' வழங்குதலை உறுதிப்படுத்துவதற்கு **நிர்வாகச் செயற்பாடுகளின்மை.** தற்போதுள்ள தரக்குறைவான செயன்முறையில், தனிப்பட்ட தொடர்பாடல்களின்

தகவல்களுக்கு தோட்ட முகாமைத்துவ நிறுவனங்கள் நம்பிக்கைப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன, இது தொடர்பாடல் தகவல்களின் பாதுகாப்புக்கான பொறுப்பைக் கொண்டிராததுடன், கவனமளிக்காமைக்கு மேலும் இடமளிக்கிறது. துஷ்பிரயோகம் என்பது மாற்றப்பட முடியுமானதும் மற்றும் மாற்றப்பட வேண்டியதுமான ஒரு பாரபட்ச நடைமுறையாகும்.

- சிவில் நிர்வாகம், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், அல்லது தோட்ட முகாமைத்துவ ஆணைகளில் **கொள்கைப் பரிந்துரைகளின் ஒன்றிணைத்தலில்லாமை.** இந்த தோட்டச் சமூகங்கள் நீர் வழங்கல், வடிகால் வசதிகள், கழிவறை வசதிகள், மேம்பட்ட வீதி வலையமைப்புகள் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் போன்ற அடிப்படைச் சேவைகள் இன்றியுள்ளன. தோட்ட முகாமைத்துவமோ அல்லது, நீர்ச் சபை, இலங்கை போக்குவரத்துச் சபை போன்ற சம்பந்தப்பட்ட அரசாங்க முகவரமைப்புகளோ அல்லது சம்பந்தப்பட்ட உள்ளூர் அரசாங்க முகவரமைப்புகளோ தேவையான சேவைகளை அளிப்பதில் அல்லது இருக்கின்றவற்றை மேம்படுத்துவது குறித்து எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை. நாட்டின் ஏனைய சமூகங்களுடன் சமனாக கொள்கை ரீதியாக சட்டபூர்வமான ஒரு உரித்தை மலையகத் தமிழ் சமூகம் கொண்டுள்ள, அநேகமான பொதுச் சேவைகள் தொடர்பான விடயங்கள், ஓர் ஏற்றுக்கொள்ளப்படும் மட்டத்திற்கு சிவில் நிர்வாகம், சிவில் சமூக ஸ்தாபனங்கள் அல்லது அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றிணைக்கப்படவில்லை.

## ஒரு விரிவான கொள்கை உரையாடலுக்கு முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்

1. குறிப்பாக இருமொழிப் பிரதேசங்களாக நிர்ணயிக்கப்பட்டவற்றில், அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்ட மொழி உரிமைகளை வலியுறுத்தும் அதேவேளை, பெருந்தோட்டப் பிராந்தியங்களிலுள்ள மலையகத் தமிழ்ச் சமூகம், அவர்களது தெரிவிற்கான மொழியில் பொதுச் சேவைகள் கிடைக்கப் பெறுகின்றவையாகவும் மற்றும் அவற்றுக்கான அணுகுவழிகளைக் கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்தல்.

2. சமூகத்தின் மக்கட் தொகைத் தன்மைகளைக் கவனத்தில் எடுக்கின்ற பொருத்தமான அரசியல் அதிகாரப் பகிர்வு மற்றும் ஒரு விகிதாசாரமுறைத் தேர்தல் ஏற்பாடுகள் என்பவற்றை உறுதிப்படுத்தல்.

4. பெருந்தோட்டங்களில் வசிப்போர்கள் சமத்துவம் கொண்ட பிரஜைகளாக, உள்ளூர் அரசாங்க அதிகாரங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றிலிருந்து, அனைத்துப் பொதுச் சேவைகளுக்கான வழிமுறைகள் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துதல். அத்தோடு, ஒப்புரவான எல்லை வரைமுறை விதிகளோடு புதிய பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு பயனுறுதி அளித்தல்.

5. குறிப்பாக இருமொழிப் பிரதேசங்களாக நிர்ணயிக்கப்பட்டவற்றில், மொழி உரிமைகள் தொடர்பான அரசியலமைப்பு உத்தரவாதங்களை, வலியுறுத்தும் அதேவேளை பெருந்தோட்டப் பிராந்தியங்களில் மலையகத் தமிழ் சமூகத்திற்கு பொதுச் சேவைகள் கிடைக்கப் பெறுகின்றவையாகவும் மற்றும் அவற்றை அணுகுவதற்கான வழிமுறைகளைக் கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்தல்.

6. மலையகத் தமிழ் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் ஏனைய உரிமைகள் அடிப்படையிலான கரிசனைகளைக் கவனத்தில் கொள்வதற்கு ஒரு நீண்ட கால தேசிய அபிவிருத்தித் திட்டத்தை வடிவமைத்தல், வளப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல்.

7. நாட்டில் மிகவும் வறுமையான மற்றும் அதிகளவில் உணவுப் பாதுகாப்பற்ற சமூகமாக மதிப்பீடு செய்யப்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களை எந்தவொரு சமூக நலன்புரித்திட்டங்களும் கவனத்தில் கொள்வதை உறுதிசெய்தல். தோட்டப்புறங்களில் கிடைக்கப் பெறுகின்றவையாகவும் மற்றும் அவற்றுக்கான அணுகுவழிகளைக் கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்தல். கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு நிலைமையைக் கவனத்தில் கொள்வதற்கு விசேட திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

8. சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள், பொலிஸ், தபால் திணைக்களம், தேர்தல் ஆணைக்குழு மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் என்பவற்றுடன் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு கூட்டிணைந்து

பெருந்தோட்டத் துறையிலுள்ள வீடுகளின் விரிவானதொரு தொகை மதிப்பை முன்னெடுத்தல் மற்றும் பின்னதாக ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு அஞ்சல் முகவரியை வழங்குதல்.

9. 2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிரதேச சபைகள் (திருத்தம்) சட்டத்தின் உத்தேசிக்கப்பட்ட குறிக்கோளின் பயனுறுதலை உறுதிப்படுத்தும் முகமாக, சம்பந்தப்பட்ட பெருந்தோட்டப் பிராந்தியங்களின் குடியிருப்பாளர்களுக்கு வீதிகள், கிணறுகள் மற்றும் அக்குடியிருப்பாளர்களின் நலன்களுக்கு அவசியமான ஏனைய பொது வசதிகளுக்கு வசதியளிப்பதற்கு பிரதேச சபை நிதியை உபயோகிப்பதற்கான நடவடிக்கைத் திட்டம் ஒரு குறித்த உப விதியின் வடிவில் உருவாக்கப்படல் வேண்டும். அதற்கு பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 'பெருந்தோட்டப் பிராந்தியங்களாக' வரையறுக்கப்பட்ட சம்பந்தப்பட்ட பகுதிகளில் பிரயோகிக்கப்படுவதற்கு ஒரு பொதுவான ஒப்புதலை அளிப்பதற்கு முடியும்.

10. மேலதிகமாக, 2018 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க குறித்த பிரதேச சபைகள் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளின் அமுல்படுத்தலின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கு மற்றும் மீளாய்வதற்கு பொருத்தமான வகையில், உள்ளூர் அரசாங்கப் பிரதிநிதிகள், தோட்ட முகாமைத்துவ அமைப்புகள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய ஒரு குழு ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.

11. குடி நீர் மற்றும் கழிவறை தொடர்பான தேசிய சராசரிக் குறிக்காட்டிகளுடன் ஒத்திசையும் வகையில் தோட்டப்புறச் சமூகத்தையும் கொண்டு வரும் ஒரு நோக்கில் ஒரு முன்னுரிமை அடிப்படையில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் ஒரு நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிச் செயற்றிட்டத்தை அமுல்படுத்தல்.

12. உள்ளூராட்சி அரசாங்கம், மாகாண மத்திய அரசாங்க அமைச்சு என்பவற்றின் அதிகாரத்திற்குள் பிரதேசத்தில் வீதி வலையமைப்புகளை உருவாக்குதல் மற்றும் கிரமமான பராமரிப்பு மற்றும் மேம்படுத்தலுக்காக தேசிய பிரதான வலையமைப்புடன் அதனை ஒருங்கிணைத்தல்.

# வீட்டுவசதி நெருக்கடி

***குறிக்கோள்:*** *பெருந்தோட்டச் சமூகங்களைப் பாதிக்கின்ற வீட்டுவசதி நெருக்கடிகளுக்கு நிலைபேறான தீர்வுகளைக் கண்டறிதல்*

## முக்கியமான பிரச்சினைகள்

⇨ பல நூற்றாண்டுகளாக பெருந்தோட்டத் துறையிலுள்ள மலையகத் தமிழர்களின் நன்னிலைகளை மோசமாகப் பாதிக்கின்ற தீவிரமான பிரச்சினைகளிலொன்று வீட்டுவசதியாகும். தொழிலாளர் குடியிருப்புகளாக பிரித்தானியர் காலத்தின் போது முதலில் கட்டப்பட்ட 10X10 விஸ்தீரணமான லயன் அறைகளின் வரிசைகளே, கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளாக அவர்களின் வாழ்விடங்களாக, அந்த வீட்டுத் தொகுதிகளின் தேய்மானங்களைக் கடந்தும் கூட, தோட்டத் தொழிலாளர்களுக்கான முக்கிய வாழ்விடத் தொகுதிகளாக இன்னமும் தொடர்ந்து இருகின்றன. தோட்ட முகாமைத்துவம், அநேகம் கூடுதலான சந்தர்ப்பங்களில் தேவையான பராமரிப்பு வேலைகளை புறக்கணித்தமை அவர்களின் வீட்டுவசதிகள் தொடர்பான குறைகளை அதிகரித்தது.

⇨ தோட்டத் துறையில் காணிகளுக்கான உரிமையில்லாமை, கையில் பணமிருந்தால் கூட அவர்களின் இருக்கின்ற தொழிலாளர் லயன் அறைகளைத் திருத்துதல் அல்லது விஸ்தரித்தல் அல்லது குழந்தைகளுடனான அவர்களின் திருமணமான பிள்ளைகளுக்காக ஏதேனும் புதிய வீடுகளைக் கட்டுவதிலிருந்து மலையகத் தமிழ் மக்களைத் தடை செய்தது. தோட்டம் அவர்களது பிறந்த இடமாக, அவற்றைக் கட்டியெழுப்பி மற்றும் நிலைபேறாக வைத்திருப்பதில் அவர்களின் பரம்பரை வகிபாகம் இருந்தாலும் கூட, தோட்டப்புறக் குடியிருப்பாளர்களுக்கு காணி உரிமைகளின் மறுப்புக் காரணமாக சம்பந்தப்பட்ட தோட்டங்களில் அநேகமான காணிகள் புறக்கணிக்கப்பட்டு, உற்பத்தித்திறனற்றவையாக தற்போது உள்ளதுடன் கிராமங்களுக்காக அவை கையகப்படுத்தப்படுகின்றன.

⇨ தோட்டக் குடியிருப்புவாசிகள் பலரும், தங்களது வீட்டுவசதிப் பிரச்சினையை, ஒரு பாரபட்சமான முறையில் மாற்று வீட்டுவசதிகளுக்கு வழிமுறையற்றவர்களாக அல்லது வீட்டுவசதி அல்லது விவசாயத் தேவைகளுக்காக காணிகளுக்கான வழியற்றவர்களாக, கைவிடப்பட்ட தொழிலாளர் லயன் அறைகளுக்கு அவர்களை மட்டுப்படுத்ததிய ஒன்றாகவே காண்பதற்கு முற்படுகின்றனர்.

⇨ இந்த ஓரறை வீட்டில், நெரிசல் மிகுந்த பகிர்ந்து வாழுதல் மற்றும் தூங்குதல் என்பவை அவர்கள் தெரிவிப்பவற்றில் அநேகம் மிகவும் முக்கியமானதாகும். இரண்டு தலைமுறைக் குடும்பங்கள் மற்றும் சில சமயங்களில் மூன்று தலைமுறைக் குடும்பங்களில் அந்தரங்கம் அல்லது தனியுரிமை தொடர்பான பிரச்சினைகளை இது தோற்றுவிக்கிறது. புதிதாகத் திருமணம் செய்தவர்கள், திருமணம் செய்யாதவர்கள் மற்றும் முதியவர்கள் மற்றும் அவர்களில் சிலர் கடும் சுகவீனமுற்றவர்களென அனைவரும் ஒரே அறையினுள் ஒரு சுகாதாரமற்ற வகையில் மற்றும் சமூக ரீதியாக விரும்பப்படாத நிலைமைகளில் அநேகம் வாழ்க்கையைப் பகிரவும் மற்றும் உறங்கவும் செய்கின்றனர்.

⇨ தொழிலாளர் லயன் அறைகளுக்கோ அல்லது அவை அமைந்துள்ள காணிகளுக்கோ எந்த சட்ட உரித்தும் இல்லாமை, சில கால்நடைக் கொட்டகைகள் உட்பட, தோட்டப்புறக் குடியிருப்பாளர்களால் தேவையான நிர்மாணங்களுக்கான ஏதேனும் வேண்டுகோள்கள் தோட்டப்புற அதிகாரங்களால் மறுக்கப்படுதல் என்பவை, அவற்றைத் தீர்ப்பதில் வலுவான கொள்கை மட்ட இடையீடுகளைத் தேவைப்படுத்தும் பிரச்சினைகளாகும்.

⇨ *'சுபிட்சம் மற்றும் செழுமையின் நோக்கு'* என்றழைக்கப்படும் தற்போதைய அரசாங்கத்தின் தேசிய கொள்கைக் கட்டமைப்பு அனைத்து வசதிகளுடன் தாழ்வான மாடி வீட்டு வசதிகள் தோட்டப்புறத் துறைக்காக நிர்மாணிக்கப்படும் எனக் குறிப்பிட்டது. ஆனாலும், இது வரை அது பயனுக்கு வரவில்லை. முன்னைய வீட்டுவசதித் திட்டங்கள் பெருந்தோட்டங்களில் பணி செய்யாதவர்களை விலக்கியது. ஏழு பேர்ச் காணியை வழங்குவதாக அரசாங்கம்

இணங்கியுள்ள அதேவேளை, 20 பேர்ச் காணிகளுக்கான கோரிக்கைகளும், எழுச்சிகளும் கூட தற்போது அங்கே அதிகரித்து வருகின்றன.

⇨ காணி உரிமை, உணவுக்கான உரிமை மற்றும் உணவு அதிகாரம் என்பவற்றுடன் நெருக்கமாக இணைந்துள்ளது. பெருந்தோட்டங்களில் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு என்பன மிக உயர்வாக உள்ளதென உலக உணவுத்திட்ட அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. எனினும், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் கொள்கை வகுப்போர்களின் அரசியல் அறிக்கைகள் அவை போதுமான வகையில் கவனம் செலுத்தப்பட்டவையாகத் தெரிவித்த போதிலும் இந்த விடயங்கள் போதுமானளவில் கவனம் செலுத்தப்படவில்லை.

⇨ பெருந்தோட்டப் பயிர்கள் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்களின் படி, அங்கு ஏராளமான உபயோகத்தில் இல்லாத அல்லது கைவிடப்பட்ட தோட்ட நிலங்கள் (40,000 ஹெக்டேர்களுக்கும் அதிகமானவை) பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது, அதனால் ஏழு பேர்ச் காணி வீடு கட்டுவதற்காகவும் மற்றும் மற்றொரு 20 பேர்ச்கள் வாழ்வாதார நடவடிக்கைகளுக்குமாகக் கொடுக்கப்பட முடியும். இதற்கமைய, காணிகளுக்கான கட்டாய தேவையிலுள்ள ஒரு மொத்தம் 174,913 குடும்பங்களுக்கு விநியோகிக்க சுமார் 14,576 ஹெக்டேர்களை மட்டுமே அது எடுக்கும் என கணிப்பிடப்பட்டது. ஒரு ஹெக்டேர் அளவு காணி 12 குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட முடியும், 27 பேர்ச்கள் நிலத்துடன் அவசியமான அணுகுவழிகளுடன் சுமார் 15 குடும்பங்கள் ஒரு ஹெக்டேர் காணியில் குடியமர்த்தப்பட முடியும். இத்துறையிலுள்ள வீட்டுவசதிப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்வதற்கு இது ஒரு சாத்தியமான தீர்வாக உள்ளது.

## கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி

- பெருந்தோட்டங்களில் பிணிப்புக் கொண்ட தொழிலாளர்களின் ஒரு முறையின் கீழ் கீழ்ப்பணிவு கொண்ட வதியும் தொழில் படையைத் தக்க வைத்திருப்பதற்கு தோட்ட அதிகாரங்களால அநேகம் ஒரு கருவியாக உபயோகிக்கப்பட்ட வாடகையற்ற லயன் அறை இடவசதியளித்தலின் சமூக-பொருளாதாரத் தாக்கத்தை விளங்கிக் கொள்வதற்கு ஒரு **வலுவான ஆராய்ச்சி இல்லாமை.**

- வீட்டுவசதிப் பிரச்சினையைக் கவனம் செலுத்துவதற்கு அவசியமான கொள்கைக் கட்டமைப்புகள் மற்றும் திட்டங்களை வடிவமைப்பதற்கு மலையகத் தமிழ்ச் சமூகத்தால் முகங் கொடுக்கப்படும் **வீட்டுவசதிப் பிரச்சினையின் உண்மையான நிலைமை தொடர்பாக நம்பகமான தரவுகளின்மை** பிரச்சினையின் தீவிரத்தைக் குறைத்து மதிப்பிட வைத்துள்ளது.

- **காணிக்கு உரிமை இல்லாமை/வீட்டுவசதிக்கு உரித்துடைமை இல்லாமை** பல அடிப்படை மனிதச் சுதந்திரங்களை அச்சுறுத்துகிறது. காணிக்கான வழிமுறை அபிவிருத்தி, வாழ்வாதாரம், அனர்த்த நிவாரணங்களைப் பெறுதல் மற்றும் வறுமைக் குறைப்பு என்பவற்றுக்கு முக்கியமானது, ஆனால் பல பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை அணுகுவதற்கும், பல சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான ஒரு நுழைவாயிலாகவும் கூட அது அநேகம் அவசியமானது.

- **காணியின் உரித்துடைமையின் அடிப்படையில் குடியுரிமையின் அங்கீகாரமின்மை,** பிரயாணிப்பதற்கு மற்றும் அரசியல் செயன்முறைகளில் பங்குபற்றுவதற்கு காணியற்ற தனிநபர்களின் திறனைக் கட்டுப்படுத்துகிறது. காணி உரித்துக்கான உரிமை தோட்டப்புறச் சமூகத்தின் ஒரு நீண்ட காலக் கோரிக்கையாகும். ஆரசியல் கட்சிகள், சிவில் சமூக ஸ்தாபனங்கள் மற்றும் புத்திஜீவிகள் பல வருடங்களாக காணி உரித்துடைமையைக் கோரி வருகின்றனர். விசேடமாக, வீட்டுவசதிகளின் உரித்துடைமை தொடர்பாக, முன்னைய அரசாங்கங்களால் பல வாக்குறுதிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனாலும் அவ்வாறான பற்றுறுதி ஏதேனிலுமிருந்து அர்த்தமுள்ள வகையில் சமூகங்கள் இன்னமும் பயனடையவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெருந்தோட்டப் பிராந்தியதுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 6 (ஈ) இன் **அமுல்படுத்தலின்மை**, அது, *''பெயர் குறிப்பிட்ட இடப்பரப்புகளினுள்ளான தோட்டங்களிலுள்ள வீடுகளின் சட்டப்படியான இருப்பாட்சியாளர்களுக்கு அந்த வீடுகளின் சொத்தாண்மையை வழங்குவதற்காக அவர்களுக்கு உரித்துறுதிகள் வழங்குவதை வசதிப்படுத்துதல்''* என்பதை அந்த அதிகாரசபையின் செயற் பாடுகளிலொன்றாகக் குறிப்பிடுகிறது: தோட்டப்புறச் சமூகங்களின் நன்மைக்காக குறிப்பான வகையில் வடிவமைக்கப்பட்டு சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தெளிவான ஏற்பாடுகளாகவே இருக்கின்ற போதிலும், வெளிப்படையான விளைவுகள் எதனையும் அங்கு காண முடியாதுள்ளது.

## ஒரு விரிவான கொள்கை உரையாடலுக்கு முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்

1. பெருந்தோட்டப் பிராந்தியங்களாக குறிப்பிட்ட இடப்பரப்புகளில் வதியும் அனைத்து மலையகத் தமிழ் சமூகங்கள் மற்றும் வீட்டுவசதிப் பிரச்சினைகளுக்கு தொடர்புடையதான அவர்களது அந்தஸ்து நிலையை உள்ளடக்கி தேசிய மட்டத்தில் ஆய்வு நடத்தப்படுதல் வேண்டும்.

2. 2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெருந்தோட்டப் பிராந்தியதுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட காணிச் சொத்தாண்மை தொடர்பான ஏற்பாடுகளின் பயனுறுதியான மற்றும் அர்த்தபூர்வமான அமுல்படுத்துதல்.

3. சட்டச் சீர்திருத்தம் மற்றும் நிர்வாக முறைமைகள் மூலமாக பெருந்தோட்டங்களிலுள்ள மனிதக் குடியிருப்புகள் அனைத்தும் முழுமையான வசதி கொண்ட கிராமங்களாக அங்கீகரித்தல்.

4. சட்டச் சொத்தாண்மை மற்றும் வீடுகள் நிர்மாணிப்பதற்கான வசதி என்பவற்றுடன் மலையகத் தமிழ் சமூகங்களுக்கு ஒதுக்கப்படக்கூடிய இடங்களின் (அல்லது காணிகளின்) அடையாளப்படுத்தலுக்கான குறிப்பானதொரு கொள்கைக் கட்டமைப்பை உருவாக்குதல்.

5. தோட்டங்களிலுள்ள அனைத்து குடியிருப்புவாசிகளுக்கும் வீட்டுவசதிக்காக ஒரு துண்டுக் காணிக்கு பாதுகாப்பான காணி உரித்து வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு தேவையான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை எடுத்தல். அவ்வாறு அளிக்கப்படும் காணியின் அளவு அதே பிரதேச செயலகப் பிரிவில் ஏனையவர்களுக்கு அளிக்கப்பட்ட காணி உரித்துகளுடன் சமனானதாக இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்திலுள்ள கணவன் மற்றும் மனைவிக்கு இணைந்த அல்லது கூட்டுச் சொத்தாண்மை அளிக்கப்படல் வேண்டும்.

6. மூடப்பட்ட அல்லது செயற்படாத தோட்டங்களிலுள்ள காணிகள் மீள்விநியோகிக்கப்படும் பொழுது பெருந்தோட்டத் தொழிலாளர் குடும்பங்களை முன்னுரிமைப்படுத்துதல். காணியின் அளவு அதே பகுதியிலுள்ள கிராமத்தவர்களுக்கு வீட்டுவசதி, விவசாயம் மற்றும் ஏனைய வாழ்வாதாரத் தேவைகளுக்காக அளிக்கபட்ட காணி அளவுகளை விடக் குறைந்ததாக இல்லாமலும், உரித்துப் பாதுகாப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. எந்தவொரு காணி விநியோகமும் தரப்பட்ட கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சமூக அமைப்பிற்கு வகிதாசாரமான வகையில் இருத்தல் வேண்டுமென்பதுடன் காணியற்ற குடியிருப்புவாசிகள் விநியோகத்தில் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

8. தேசிய வீடமைப்பு அதிகார சபையில் ஒரு விசேட பிரிவை ஸ்தாபித்தல் மற்றும் 10 வருடங்களில் வீட்டுவசதிகளுக்கான முழுத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யும் ஒரு இலக்குடன் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஒரு மானிய அடிப்படையில் அல்லது சலுகை விதிமுறையில் தனிவீடுகளை வழங்குவதற்கு வருடாந்த வரவுசெலவுத் திட்டங்களில் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்தல். மலையகத் தமிழ்ச் சமூகத்திற்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக இரு தரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்தி உதவிகளைத் தீவிரமாக ஆராய்தல்.

9. மத்திய தர வருமானம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள மற்றும் பெருந்தோட்டத்துறையிலுள்ள ஏனைய ஒத்த குழுக்களுக்காக ஒரு விசேட வீட்டுவசதி உதவித் திட்டத்தை அமுல்படுத்துதல்.

10. கடந்த மூன்று தசாப்தங்களில் பல்வேறுபட்ட அரசாங்கத் திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 37,000+ வீடுகளுக்கான உரித்துறுதிகளை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் வழங்குதல்.

# சிறுவர் மற்றும் இளைஞர்

*குறிக்கோள்: பெருந்தோட்டத் துறையில் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் சிறுவர்கள் மற்றும் தொழில்வாய்ப்பற்ற இளைஞர்கள் ஆகியோர்களின் பிரச்சினைகளை கவனம் செலுத்துவதற்கு கொள்கைகள் மற்றும் இடையீடுகளை உருவாக்குதல்*

## முக்கியமான பிரச்சினைகள்

⇨ பாரபட்சமான அரச கொள்கைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளை அரச கட்டுப்பாட்டின் கீழ் எடுப்பதிலான புறக்கணிப்புகள், தகுதிவாய்ந்த மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களை நியமித்தல், மற்றும் போதுமான வளங்கள் ஒதுக்குதுதல் போன்றவை காரணமாக மலையகத் தமிழர்களின் கல்வி தேசிய சராசரிகளுக்கு கீழாகவே இருக்கின்றது.

⇨ பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்த வரை, அனைத்து தேசிய பல்கலைக்கழகங்கள் 15 இலுமான சுமார் 100,000 மாணவர்களுள், 2500 மாணவர்கள் மட்டுமே பெருந்தோட்டப் பகுதிகளிலிருந்தானவர்களாக உள்ளனர். ஒவ்வொரு வருடமும், சராசரியாக 40,000 மாணவர்கள் இந்த பல்கலைக்கழகங்களிற்குள் நுழைகின்றனர், ஆனால் தோட்டப்புற மாணவர்கள் அவர்களுள் வெகு சிலராகவே உள்ளனர். பல்கலைக்கழக அனுமதிக்காக அவர்களுள் வருடாந்தம் 500-600 மாணவர்கள் மட்டுமே தெரிவு செய்யப்படுகின்றனர், விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பிரிவுகளில் உயர் கல்வியை வழங்குவதற்கு போதுமான வசதிகளுடன் பாடசாலைகள் இல்லாததினால், பெரும்பாலும் அவர்கள் கலைப் பிரிவிற்குள்ளாகவே மட்டுப்படுத்தப்படுகின்றனர்.

⇨ தேசிய எழுத்தறிவு வீதம் 92.3%, ஆனால் 2020 இல், பெருந்தோட்டத் துறையில் அது 85% ஆக மாத்திரம் இருந்ததுடன் நீடித்த புறந்தள்ளல் மற்றும் மலையகத் தமிழ்ச் சமூகத்திலுள்ள சிறுவர்களின் கல்வி ரீதியான அடைதல்களை மேம்படுத்துவதற்கு வலுவான திட்டங்களில் நீண்ட கால உதாசீனம் மற்றும் அமுல்படுத்தாமை என்பன கிடைக்கும் தரவுகளுடன் தெளிவாகப் புலப்படுகின்றன.

⇨ இதன் காரணமாக, தோட்டப்புறச் சமூகத்திலிருந்த பல மாணவர்கள் தொடர்ந்து உயர் கல்வி அற்றவராயினர். அதைத் தவிர, தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கற்கைநெறிகளில் சேர்ந்து நல்ல ஊதியத்துடன், கண்ணியமான வேலைகளுக்குத் தேவையான திறன்களைப் பெறுவதற்கு தமிழைப் ஒரு போதனா மொழியாகக் கொண்டு இயங்கும் தொழில் பயிற்சி நிலையங்கள் அங்கு இல்லாதிருந்தன.

⇨ பயனுறுதியான, புத்தாக்க வகையான, காலத்திற்குத் தகுந்த மற்றும் பல்துறை சார்ந்த பதிலிறுப்புகளை வழங்குவதற்கு அரசு தவறுமாயின், பெருந்தோட்டச் சமூகங்களின் பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுகின்ற அபாயத்திற்குள்ளாவது மட்டுமன்றி அவர்கள் சிறார் தொழிலிற்கு (கொத்தடிமையாதல் உட்பட) தள்ளப்படுகின்ற ஆபத்தில் இருக்கின்றனர்.

⇨ பெருந்தொற்றுக்கான எதிர்வினயாற்றுதலின் போது பெண்கள் மற்றும் சிறுமிகள் பலரும் அனுபவித்த வழமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களின் மோசமான வேறுபட்ட மற்றும் சமனற்ற வகையிலான பாதிப்புகளுக்கு முகங் கொடுத்தனர். கொவிட்-19 பிரச்சினைகள் பால்நிலை ரீதியாக நடுநிலையானவையல்ல என்பதுடன் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மூலமாக பால்நிலையை உள்ளீர்க்காத எந்தப் பதிலிறுப்பும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை முன்னேற்றுதில் அடைந்த சிறிய முன்னேற்றத்தையும் தடம் புரள வைப்பவையாக இருந்தன.

⇨ கொவிட்-19 இன் போது பாடசாலைகளின் மூடல்கள், பராமரிப்பு வழங்குபவர்களாக உட்பட வீட்டு வேலைகளுக்கும் அத்தோடு துஷ்பிரயோகம், சுரண்டல் மற்றும் வன்முறை என்பவற்றுக்கு சிறுவர்களின் இடர்நேரல் தன்மையை அதிகரித்தது. பெற்றோர்கள் (சில குடும்பங்களில் தாய் மட்டும் குடும்பத் தலைவியாகவுள்ள) தேயிலைக் கொழுந்து பறிப்பதற்கு வேலைக்காகச் செல்வதால் பெண் பிள்ளைகள் அநேகம் மிகவும் இடர்நேரும் நிலைமையில், வீட்டில் தங்களைத் தாங்களே தனித்துக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையில் விடப்படுகின்றனர்.

வெறுமனே நோயின் வைரசிற்கு வெளிப்பட்ட காரணத்தினால் மட்டுமன்றி, வலுவான மற்றும் பொறுப்புக்கூறும் சிறுவர் உரிமைகள் பாதுகாப்புச் சேவைகள் மற்றும் பொறிமுறைகள் இல்லாமையின் காரணமாக துஷ்பிரயோகம் மற்றும் வன்முறை என்பவற்றின் பாதிப்பிற்குள்ளானவர்கள் மற்றும் சாட்சிகள் என இரண்டுமாக அவர்கள் இருப்பதுடன், அவற்றினால் இன்று மனக்காயங்களையும் சுமக்கின்றனர்.

⇨ அரசு, அதன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரங்கள் மூலம், அனைத்துச் சிறுவர்களும் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றதை உறுதிசெய்கின்ற அதேவேளை, சிறுவர் உரிமைகளின் மேம்படுதல்கள் மற்றும் முன்நகர்வுகளை ஊக்குவிக்கும் ஒரு கலாச்சாரத்தை ஊக்குவிப்பது அவசியமாகும். கீழுள்ள அட்டவணை, மலையகத் தமிழ்ச் சமூகம் மத்தியில் கல்வித் துறையின் தீவிரத்தன்மையைச் சுட்டிக்காட்டுகிறது.

**பெருந்தோட்டத் துறையில் கல்வி மட்டநிலை 2017/18**

| குறிக்காட்டிகள் | தேசிய மட்டம் | நகர மட்டம் | கிராமிய மட்டம் | தோட்டப்புற மட்டம் |
|---|---|---|---|---|
| வயதுவந்தோர் எழுத்தறிவு | 91.4 | 94.6 | 91.8 | 74.3 |
| பாடசாலை செல்லாதவர் | 3.1 | 2.2 | 3.0 | 8.3 |
| தரம் ஐந்து வரையானவர்கள் | 21.1 | 15.9 | 21.5 | 35.5 |
| தரம் 6-10 சித்தியடைந்தவர்கள் | 44.0 | 39.6 | 44.0 | 44.0 |
| சா/த சித்தியடைந்தவர்கள் | 16.7 | 19.2 | 16.7 | 8.6 |
| உ/த சித்தியடைந்தவர்கள் | 12.2 | 18.2 | 11.4 | 3.3 |
| பட்டப்படிப்புக்கு மேல் சித்தியடைந்தவர்கள் | 2.8 | 4.9 | 2.4 | 0.3 |
| கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடாதவர்கள் – வயது 5-14 (%) | 4.2 | 4.5 | 3.9 | 7.2 |
| கணினி அறிவு (%) | 24.2 | 36.8 | 22.1 | 8.8 |
| கல்விக்கான மாதாந்தச் செலவினம்(இலங்கை ரூபாய்கள்) | 2401 | 4130 | 2114 | 948 |
| இரண்டாம்நிலைக்கு மேல் கல்விக்கான சேர்க்கை (%) | 80.6 | 86.2 | 81.4 | 53.8 |
| கல்லூரிப் பள்ளிச் சேர்க்கை (%) | 39.4 | 45.8 | 39.7 | 12.8 |

*மூலம்: குடும்ப வருமானம் மற்றும் செலவின மதிப்பாய்வு அறிக்கை. 2019*

⇨ அரசுக்குச் சொந்தமான தோட்டங்களில் வதியும் சிறுவர்கள் மத்தியில் பாடசாலையை விட்டு இடைவிலகுதல் என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாகும். நாட்டின் குறைந்த வருமானங்கள் மற்றும் தொடர்ச்சியான வறுமையுடன் கல்விச் செலவுகளை பெற்றோர்களால் சமாளிக்க முடியாதுள்ளதினால், கடந்த 10 வருடங்களில் இப்பிரச்சினை கணிசமானளவு அதிகரித்துள்ளது.

⇨ தோட்டப் பாடசாலைகள் அநேகம் ஆரம்பநிலை வகுப்புகளை மட்டுமே நடத்துகின்றன. தோட்டங்களிலிருந்து அண்மித்த நகரங்களிலுள்ள இரண்டாம்நிலை பாடசாலைகளுக்கு மாறுவது என்பது அதில் சம்பந்தப்படுகின்ற செலவினால் மட்டுமன்றி பிரதேசத்திலுள்ள மோசமான போக்குவரத்துச் சேவைகளினாலும் கூட கடினமானதாகின்றது.

⇨ தோட்டங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் அண்மித்த நகரிலுள்ள இரண்டாம்நிலைப் பாடசாலைகளும் நன்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்களில்லாமை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி என்பவற்றுக்கான வசதிகளின்மை, ஆய்வுகூடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவை இல்லாமை காரணமாக பல மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன.

⇨ நெரிசல் மிகுந்த லயன் அறை வீடுகள், வீட்டு உறுப்பினர்களிடமிருந்தான இடையூறுகள் மற்றும் வீட்டு வன்முறை உட்பட மதுப்பழக்கத்தினால் ஏற்படுகின்ற கவனச்சிதறல்களின் சாத்தியம் காரணமாக தோட்டப்புறப் பிள்ளைகள் தங்களது வீட்டுப் பாடவேலைகளில் கவனம் செலுத்துவதற்கு இயலாதுள்ளனர்.

⇨ ஒரு புறம் தோட்டத்தில் வேலைக்கான உத்தரவாதம் குறைவடைகின்றமை மற்றும் இளைஞர் மத்தியில் உடலுழைப்புக்கான விருப்பின்மை ஆகிய இரண்டும் இந்த நிலைமைக்குப் பங்களித்துள்ளன. மலையகத் தமிழ்ச் சமூகங்களின் இளைஞர்களால் கல்வியில் வெற்றிகளை ஈட்டிய போதிலும், தோட்டவாசிகளின் பிள்ளைகள் அலுவலகப் பணிகள் மற்றும் தோட்டத்தில் உயர் மட்ட மேற்பார்வை வேலைகளுக்குத் தேவையான கல்வித் தகைமைகளைக்

கொண்டிருந்தாலும் கூட தோட்ட அதிகாரிகள் அவர்களின் நீண்ட காலமாகக் கொண்டுள்ள பாரபட்சம் காரணமாக அவ்விளைஞர்களின் ஆட்சேர்த்தலை வேண்டுமென்றே தவிர்க்கின்றனர்.

⇨ தோட்டத் துறையில் இளைஞர் மத்தியில் வேலைவாய்ப்பின்மை: ஓர் அதிகரித்த எண்ணிக்கையிலான தோட்டத்து இளைஞர்கள் திறனற்ற உழைப்பு, தகுதிக்கு குறைந்த வேலை, குறைந்த ஊதியத்துடன் தனியார் நிறுவன வேலைகள் என்பவற்றில் ஈடுபடுகின்றதுடன் அவர்களில் பலரும் மோசமான வேலை நிலைமைகளில் பணியாற்றுகின்றனர். மொத்தத்தில், திறன்கள் மற்றும் கிடைக்கின்ற வேலைகள் என்பவற்றுக்கிடையிலான பொருத்தமின்மை காரணமாக தோட்டப்புற இளைஞர் மத்தியில் வேலைவாய்ப்பின்மை ஒரு பூதாகாரமான பிரச்சினையாக உருவாகக் காணப்படுகிறது.

## கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி

- பெருந்தோட்டத் துறையில் தமிழ் மொழிக் கல்விக்கான மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகளின் நீண்டகாலப் பிரச்சினைக் கவனத்தில் கொள்வதற்கு **கொள்கை மட்ட ரீதியில் தீர்மானங்களின்மை.**

- தோட்டச் சிறுவர்களுக்கு உணவு வழங்குவதில் பாடசாலைகளில் தொடரும் வசதியின்மையைக் கவனம் கொள்வதற்கு மாகாண மட்ட அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கத்தினால் **வளங்களின் ஒதுக்கீடின்மை.**

- மலையகத் தமிழ் சமூகத்திலுள்ள சம்பந்தப்பட்ட சிறுவர்களுக்கு வெளியிடத்திலுள்ள சிறந்த வசதிகள் கொண்ட பாடசாலைகளில் இரண்டாம்நிலைக் கல்விக்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்துவதில் தோட்டத்திலுள்ள மோசமான போக்குவரத்து வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு பிரச்சினையைக் கவனத்தில் கொள்வதற்கு அமுல்படுத்தப்படக்கூடிய முறைகளுடன் **நீடித்த தீர்வுகளின்மை.**

- முறையான தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழிற்கல்வித் திறன்கள் மற்றும் வழிகாட்டலிற்கு **தொழில்நுட்பக் கல்லூரிகளில்லாமை**, கல்வியைப் பொறுத்தவரை, தோட்டப்புற இளைஞர்களுக்கு ஒரு பெரும் பின்னடைவாகவே காணப்படுகிறது. ஒரு மிக நீண்ட காலத்திற்கு அவர்களது குடியுரிமைகளுக்கான உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்டதால், 1980 களின் பிற்பகுதி வரை அரசாங்கத் துறையில் வேலைவாய்ப்புகளுக்கு அவர்கள் போதிய வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியவில்லை. மாகாண சேவைகள், சட்ட அமைப்புகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் உட்பட பொதுத்துறையில் அவர்களின் வேலைவாய்ப்பு வீதம் 0.1%, 0.2% மற்றும் 0.5% ஆக முறையே இருந்தது.

- **தொழில் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பயிற்சி அல்லது தொழிற் கல்வி வாய்ப்புகளில்லாமை.** ஹட்டன் நகரில் அமைந்துள்ள தொண்டமான தொழில்நுட்பக் கல்லூரி நுவரெலியா மாவட்டத்திலுள்ள தோட்டப்புற இளைஞர்களுக்கு மட்டும் சில தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குகிறது. இந்தக் கல்லூரி கூட தொழிற் சந்தையின் கேள்விகளைப் பூர்த்தி செய்வதற்கான தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதில்லை என்பதுடன் அதற்கான வளங்கள் கிடைக்கும் வகையிலாக இல்லை. அதன் பயனாக, இன்று வேலைவாய்ப்பின்மை தோட்டத்து இளைஞர்கள் மத்தியில் ஒரு முக்கியமான சமூகப் பிரச்சினையாக வந்துள்ளது.

## ஒரு விரிவான கொள்கை உரையாடலுக்கு முன்மொழியப்பட்ட செயற்பாடுகள்

1. நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் அவிசாவளை வலயங்களில் 10 தேசிய பாடசாலைகளை தரமுயர்த்தல்/ஸ்தாபித்தல் மூலம் தோட்டப்புறம் மற்றும் தேசிய கல்வி ரீதியான வெற்றிகளிற்கிடையில் முக்கியமான வேறுபாடுகளைக் குறைத்தல் மற்றும் அவற்றை இல்லாதொழித்தலுக்கு நடவடிக்கை எடுத்தல்.

2. விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்ப கல்விப் பிரிவுகள் உட்பட பிராந்தியத்தில் முழுமையான வசதிகள் கொண்டவையாக தேசிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவை தோட்டப்புறப் பிள்ளைகளால் அணுகக்கூடியதாகவும் இருத்தல்.

3. பௌதிக மற்றும் மனித வளங்களின் அடிப்படையில் ஏனைய பாடசாலைகளுடன் சமனானதாக பெருந்தோட்டப் பிராந்தியத்திலுள்ள ஆரம்பப் பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்துதல்.

4. விளையாட்டு மைதானங்கள், நூலகங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் உட்பட, பெருந்தோட்டப் பிரதேசங்களிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிற்கும் பௌதிக வளங்களை ஒதுக்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

5. சிறுவர்கள், குறிப்பாக வளரிளம் பருவத்து பெண் பிள்ளைகளுக்கான பொதுப் போக்குவரத்தின் தரம் மற்றும் அடிக்கடி கிடைக்கும் தன்மையை தோட்டப்புறங்களில் மேம்படுத்துதல்.

6. இருதரப்பு/பல்தரப்பு அபிவிருத்தி உதவியுடன் ஓர் இடைநிரப்பும் திட்டத்தை உறுதிப் படுத்துவதற்கு மத்திய மற்றும் இரண்டாம் நிலைகள் மற்றும் இடைநிலையில் குறிப்பாக விஞ்ஞானம் மற்றும் கணிதப் பிரிவுகளில் தேவையான எண்ணிக்கையில் தகுதிவாய்ந்த ஆசிரியர்ளை ஆட்சேர்த்தல்.

7. பல்கலைக்கழக நுழைவில் தோட்டப்புறத்திலிருந்தான மாணவர்களுக்கான ஒரு நேர்மறையான நடவடிக்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்தல், குறிப்பாக பொறியில், மருத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவுகள் தமிழ் மொழி மூலமாக தோட்டப்புறப் பகுதிகளிலிருந்து பட்டபடிப்பைப் பூர்த்தி செய்யும் ஆண் மற்றும் பெண் பிள்ளைகளிற்கிடையில் அது சமனாகப் பகர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

8. மலைநாட்டுத் தமிழ்ச் சமூகத்தின் விசேட தேவைகளுக்கு குறிப்பாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தேசிய பல்கலைக்கழகம், மேலதிகமாக ஒரு முழுவதும் வசதி கொண்ட கல்வியல் கல்லூரி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி நிலையத்தை ஹட்டன் நகரில் ஸ்தாபித்தல்.

9. மலைநாட்டு இளைஞர் - ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் அணுகக்கூடிய வகையில் தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிக் கற்கைநெறிகளை ஆக்குதல். இது, சாதகமற்ற நிலையிலான இளைஞர்களுக்காக தமிழைப் போதனா மொழியாகக் கொண்டு கூடுதலான கற்கைநெறிகளை நடத்துதல் மற்றும் விசேட நுழைவுத் தகைமைகள் மற்றும் இலக்குத் திட்டங்களை ஸ்தாபிப்பதின் மூலமாக மேற்கொள்ளப்படும். கூடுதலான அணுகுதல் தன்மை மற்றும் பங்குபற்றுதலை ஊக்கப்படுத்துவதற்கு தொழில் ஆலோசனைத்துணை, தொழிலின் போதான பயிற்சி மற்றும் உதவித்தொகைகள் என்பன கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

10. மக்கட் தொகையுடன் பிரதிநிதித்துவம் பொருத்தமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பொதுச் சேவைகளில் சிறிய வேலைவாய்ப்பு வகைகளில் தகுதிவாய்ந்த மலைநாட்டு தமிழ் ஆண்கள் மற்றும் பெண்கள் பங்குபற்றுவதற்கு ஓர் உறுதியான நடவடிக்கைத் திட்டத்தை அமுல்படுத்துதல்.

11. தலைநகரத்திற்கு இடம்பெயர்ந்து குறைந்த ஊதியம் மற்றும் திறமையற்ற முறைசாராத் தொழில்களில் சிக்கித் தேங்கியுள்ள மலைநாட்டு இளைஞர்களின் தொழில் மற்றும் தலைமைத்துவத் திறன்களின் முன்னேற்றம் மற்றும் தொழில் வழிகாட்டுதல் என்பவற்றுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நிலையத்தைக் கொழும்பில் ஸ்தாபித்தல்.

12. தேயிலை உற்பத்தி மற்றும் பதப்படுத்துதலில் உயர் பதவிகளை வகிப்பதற்கு அவை தொடர்பான தொழில்நுட்பத்தில் முறைசார் பயற்சி மற்றும் அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு மலையகச் சமூகத்திலிருந்தான இளைஞர்களுக்கு வழிவகைகளை அளித்தல். நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் தேசிய, சர்வதேச தொழில்நுட்ப சேவை வழங்குநர்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் அபிவிருத்தி நிலையங்களை உருவாக்குவதற்கு இருதரப்பு மற்றும் பலதரப்புச் செயற்பாட்டாளர்களுடன் ஒத்துழைப்பை உறுதி செய்தல்.

# தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் முறைசாராத் தொழிலாளர்கள்

***குறிக்கோள்:*** *தோட்டப்புறச் சமூகங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் முறைசாராத் தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்புகளாலும் முகங் கொடுக்கப்படும் தனித்துவமான தேவைகள் மற்றும் சவால்களைக் கவனம் கொள்வதற்கான கொள்கைப் பரிந்துரைகள்*

## முக்கியமான பிரச்சினைகள்

⇨ பெருந்தொற்றுக் காலத்தில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் பின்னர் சுமார் 80 சதவீதமான மலைநாட்டுத் தொழிலாளர்கள் தங்களது தோட்டங்களுக்கு மீள்திரும்பினர். அவர்களில் 30 இலிருந்து 40 சதவீதமானவர்கள் வேலைவாய்ப்பின்றி, தங்கியியிருப்பவர்களாக ஆயினர். கொவிட்-19 பரவல் மற்றும் பின்னைய பொருளாதார நெருக்கடிகளில் சமூகம் பொருளாதாரக் கஷ்டங்களால் பாதிக்கப்பட்டதுடன் தங்களது பிள்ளைகளுக்கு உணவளிக்கவும், இணையத் தொடரலைக் கல்வியை வழங்கவும் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளானது.

⇨ தோட்டத் தொழிலாளர்கள் அல்லாதவர்கள் நலன்புரி ஏற்பாடு, சமூகப் பாதுகாப்பு நன்மைகள் மற்றும் பொருள் ரீதியான நன்மைகளில் தனியார் மயப்படுத்தப்பட்ட தோட்ட முகாமைத்துவம், அரசுக்குச் சொந்தமான தோட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றால் விலக்கி வைக்கப்பட்டனர். தோட்டத் தொழிலாளரில்லாத ஒரு கணிசமான எண்ணிக்கை கொண்டவர்கள் இடம்பெயர்ந்த தொழிலாளர்களாக அருகிலுள்ள கிராமங்கள், மரக்கறித் தோட்டங்கள், கட்டட நிர்மாணப் பகுதிகள், புறநகர்ப் பகுதிகளில் தற்காலிக வேலைகளில் தின ஊதியத்திற்காக ஈடுபடுகின்றனர். புறக்கோட்டைப் பகுதியில் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள் செய்வது உட்பட வெவ்வேறு துறைகளில் 50,000 இற்கும் அதிகமான தோட்டப்புற இளைஞர்கள் கொழும்பில் வேலை செய்கின்றதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும், அநேகம் அவர்கள் சுரண்டப்படுகிறார்கள் மற்றும் ஊதியம் குறைவாக கொடுக்கப்படுகிறார்கள்.

⇨ தங்களது வாழ்வாதாரங்களை இழந்த தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு விலகிச் செல்வதற்கு தள்ளப்பட்டார்கள் அல்லது பட்டினி, கடும் வறுமை மற்றும் விரக்தி என்பவற்றால் வாடுவதற்கு விடப்பட்டார்கள். கைவிடப்பட்ட நிலங்களில் கூட வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளைத் தொழிலாளர்கள் கொண்டிருப்பதற்கு தோட்ட முகாமைத்துவம் அனுமதிக்கவில்லை. கொவிட்-19 பெருந்தொற்றின் பின்னர் கொழும்பிலிருந்து மீள்திரும்பிய இளைஞர்கள், தங்களது வாழ்வாதாரங்களுக்காக கைவிடப்பட்ட நிலங்களைப் பயன்படுத்துவதற்கு முயற்சித்தனர், ஆனாலும் அவ்வாறு ஈடுபடுவதற்கு தோட்ட முகாமைத்துவத்தால் அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

⇨ வணிகம் மற்றும் சுற்றுலாத் தேவைகளுக்காக காணி அத்துமீறல்கள் அல்லது அபகரிப்புகள் அதிகரிக்கக் காணப்படுகிறது. மோசமான பராமரிப்பு மற்றும் பாரிய நிலப் பரப்புகளின் பாவனையின்மை காரணமாக, வெளியாட்கள் பல்வேறு நோக்கங்கள் அல்லது தேவைகளுக்காக தோட்ட நிலங்களைப் பிடித்துள்ளனர். நாட்டின் பிரஜைகளாக காணிகளுக்கான உரிமைகளை தொழிலாளர்கள் கொண்டிருந்த போதிலும் கூட இந்த உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது.

⇨ உள்ளூரில் செல்வாக்கு கொண்ட ஆட்கள் அரசியல்வாதிகளின் ஆதரவோடு இந்த நிலங்களை ஆக்கிரமித்துள்ள போதிலும் தோட்ட முகாமைத்துவத்தாலோ அல்லது மேலிடத்து நிர்வாகத்தாலோ எந்த வித நடவடிக்கைகளும் அவர்களுக்கு எதிராக இதில் மேற்கொள்ளப்படவில்லை. அதிகார பலம் கொண்ட சில அரசியல்வாதிகள் அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் உபயோகப்படுத்தப்படாத நிலங்களை சுற்றுலா உட்பட வேறுபட்ட தேவைகளுக்கு உபயோகிப்பதற்கு அவற்றைக் கைப்பற்றுவதற்கு வேண்டினர்.

⇨ வினைத்திறனில்லாத தன்மை கொண்ட தொழிற் சங்கங்கள் காரணமாக, ஊதியப் பிரச்சினைகள், ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி போன்ற நலன்புரிக் கொடுப்பனவுகள், தினசரி வேலைக்கான விதிமுறைகளை ஏற்படுத்தல், தேயிலைச் செடி நிலப்பகுதிகளை துப்பரவாக்குதல், உரங்கள் மற்றும் இரசாயனங்களை நேரத்திற்கு இடுதல் என்பவற்றிலான தொழிலாளர்களின் உரிமைகளின் தொடர்ச்சியான மீறல்கள் அங்கே உள்ளன. சில சந்தர்ப்பங்களில், சம்பளங்கள் ஒழுங்காக வழங்கப்படவில்லை. தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் தங்களின் ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி நிதிகளைப் பெற்றுக் கொள்வதில் குறைவான சாத்தியங்களே உள்ளன.

### கொள்கை/அமுல்படுத்தல் இடைவெளி

- **தேசிய ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பிரயோகம் இல்லாமை** பெருந்தோட்டங்களில் பணி செய்யும் நிலைமைகளில் மோசமான நிலைமைகளையே ஏற்படுத்தியுள்ளன. பெருந்தோட்ட நிறுவனங்கள் பல்வேறு சர்வதேச உடன்பாடுகள் மற்றும் மழைக்காடு, நெறிமுறைத் தேயிலைப் பங்காண்மை மற்றும் நீதியான வர்த்தகம் உட்பட்ட சான்றுபடுத்தல்களின் தரப்பாக உள்ளது. இந்த சான்றுபடுத்தல்களின் முக்கிய அம்சங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. பல்வேறு சர்வதேச தொழில் ஸ்தாபன (ILO) உடன்பாடுகள் கௌரவமான பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன, ஆனாலும் அவை முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என்பதுடன் பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை மேம்படுத்துவதற்கு இவை அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு மோசமான ஒரு ஒழுங்குபடுத்தும் பொறிமுறையே அங்குள்ளது.

- **ஸ்தாபிக்கப்பட்ட தொழில் சட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பிரயோகமின்மை.** வாழ்வதற்கான ஊதியம் விவசாயம் உட்பட, அனைத்துத் துறைகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உலகளவிலான கருதுகோளாகும். ஆனாலும், இலங்கையைப் பொறுத்தவரை, பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வதற்கு ஊதியம் அளிக்கப்படுவதில்லை என்பதுடன் அவர்களின் ஊதியம் மற்றும் நாட்டின் வாழ்க்கைச் செலவுச் சுட்டி என்பவற்றுக்கிடையில் ஒரு பாரிய வேறுபாடும் அங்கு உள்ளது.

- **தேசிய ரீதியாக ஸ்தாபிக்கப்பட்ட வேலைத்தலப் பாதுகாப்பு/சுத்தம்/சுகாதார ஒழுங்கு முறைகளின் பிரயோகமின்மை.** இந்தத் தொழில்துறை 65% இற்கும் அதிகமான பெண் தொழிலாளர்களைக் கொண்டிருக்கிறது, ஆனாலும், களத்தில் கழிவறைகளுக்கு வசதிகள் எதுவுமில்லை என்பதுடன் தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பன கீழ் மட்டங்களிலேயே உள்ளன. இடைவேளையோ அல்லது ஓய்வோ இல்லாது 8 மணித்தியாலங்களுக்கும் மேலாக வேலை செய்வதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் மற்றும் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு தாய்மார்களுக்கு போதுமான நேரமும் அளிக்கப்படுவதில்லை.

## முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள்

1. ஒரு வாழ்க்கைக்கான ஊதியத்தை தொழிலாளர்களுக்க உறுதிசெய்தல் மற்றும் இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஒரு நிலைபேறான தீர்வாக தோட்டத் தொழிலாளர்களை சிறுஉரிமையாளர்களாக நிலைமாற்றுகின்ற விதத்தில் தொழிற்றுறையின் மீள்நிர்மாணச் செயன்முறையை ஆரம்பித்தல். ஒப்பந்த அடிப்படை விவசாயத்தின் ஏதேனும் பாதிப்பான தாக்கங்கங்களைக் கவனத்தில் கொள்தல் மற்றும் வேலைவாய்ப்பின் பாதுகாப்பு மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கான வருமானத்தை உறுதிப்படுத்துதல்.

2. அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்கள், அத்தோடு தனியார் தோட்டங்கள் என்பவற்றின் தொழில் நடைமுறைகளை பலபடுத்திய தொழில் திணைக்களம் ஊடாக அரசாங்கம் கடுமையாகக் கண்காணிப்பதுடன், தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப் படுகின்றதை உறுதிப்படுத்துதல். தொழிலாளர்களுக்கு தற்போது கிடைக்கும்படியாகவுள்ள ஏதேனும் தற்போதைய தொழில் சட்டப் பாதுகாப்புகள் பலப்படுத்தப்படல் வேண்டும்.

3. பயனாளிகளால் ஊ.சே.நி, ஊ.ந.நி மற்றும் ஓய்வூதியங்கள் என்பவற்றின் மீளப்பெறுதலுக்காக ஒரு கூடுதல் வெளிப்படைத் தன்மை கொண்ட, பயனர் இணக்கமான மற்றும் நெறிப்படுத்தப்பட்ட செயன்முறையை அறிமுகப்படுத்துதல்.

4. இடம்பெயர்ந்து வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மலையகத் தமிழர்களுக்கு காணி உரிமைகள் மற்றும் அரச சேவைகளுக்கான ஏனைய உரித்துகள் எந்தப் பாரபட்சமுமின்றி பூர்த்தி செய்யப்படுகின்றதை உறுதிசெய்தல்.

5. இலங்கைப் பொருளாதாரத்திற்கு மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பாரிய பங்களிப்பையும் மற்றும் அவர்கள் ஆளாகுதலுக்கு உள்ளாகிய கட்டமைப்பு ரீதியான புறந்தள்ளலையும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ளல்.

6. பெண் தொழிலாளர்களுக்கு பாலியல் ரீதியான தொல்லைகளற்ற வேலைத்தலம் மற்றும் சமனான ஊதியம் என்பவற்றை உறுதிசெய்தல். வீட்டுப் பணியாளர்கள் மற்றும் முறைசாராத் துறைத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சட்ட மற்றும் நிர்வாக நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

7. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 15 (1) இன் கீழ் விடுக்கப்பட்ட ஓர் ஒன்றிணைத்தல் சான்றிதழினால் ஒன்றிணைக்கப்பட்ட பெருந்தோட்ட நிறுவனங்களின் உடன்படிக்கைகள் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால், 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பொதுக் கம்பனிகள் சட்டத்திற்கு பொதுக் கூட்டுத்தாபனங்களின் மாற்றுதலின் பிரிவு 2 இன் விதிகள் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வியாபாரங்களின் பொறுப்பேற்றல் இரத்துச் செய்யப்பட்டும் மற்றும் மாற்றீடு செய்யப்பட்டதோடு அது தொடர்பில் நீண்ட காலக் குத்தகை ஒப்பந்தங்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையுடன் (JEDB) அல்லது 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டத்தாபனச் சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (SLSPC) என்பவற்றுடன், செய்து கொள்ளப்பட்டு, சந்தர்ப்பத்திற்கு அமைய, ஒரு காலத்திற்கு கொடுக்கப்பட்ட இனங் காணப்பட்ட தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குத் தோட்டங்கள் தொழில் தராதரங்களுடன் அவற்றின் இணக்கப்பாட்டை மதிப்பீடு செய்வதற்கு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

8. மலையகத் தமிழ்ச் சமூகங்கள் மற்றும் ஏனைய கரிசனைக்குரிய தரப்புகள் தங்களது பிரச்சினைகள், குறைகள், மற்றும் சமூகப் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம், சிவில்-அரசியல் மற்றும் ஏனைய அனைத்து தளங்கள் தொடர்பான அநீதி என்பவற்றை முன்வைப்பதற்கான இடைவெளியை உறுதிப்படுத்தி ஒரு சுயாதீன ஆணைக்குழுவை நியமித்தல். இது பாதிக்கப்பட்ட சமூகங்களின் தற்போதைய நிலை, சாத்தியமான கொள்கை, கட்டமைப்பு, நடைமுறை மற்றும் நிர்வாகம் தொடர்பான தடைகள் என்பவற்றைக் கணக்கில் கொள்வதை நோக்காக எடுத்தல் வேண்டும். இவற்றினால் இந்தச் சமூகங்கள் ஒடுக்கப்பட்டதுடன் அவை பொருத்தமான சட்ட, கொள்கை மற்றும் நடைமுறை தொடர்பான சீர்திருத்தங்களை இனங்காண்பதற்கும் மற்றும் செல்லுபடியாக்கவும் ஒரு பரந்த கலந்தாலோசனைச் செயன் முறையை வடிவமைக்கவும் செய்தன.